குறிப்பிட்ட மூலிகை தாவரங்கள்
குறித்த தேசிய பிரச்சாரம்

# அமுக்கிரா

## (அஸ்வகந்தா)

“ஒரு ஆரோக்கிய ஊக்குவிப்பான்”






வட்டார வழிவகை மையம் – தெற்கு வட்டாரம்

(தேசிய மூலிகைத் தாவரங்கள் வாரியம்)

கேரளா வன ஆராய்ச்சி நிறுவனம்

பீச்சி, திருச்சூர் –680 653, கேரளா

## அறிமுகம்



அமுக்கிரா கிழங்கு (அஸ்வகந்தா) வணிகரீதியாக முக்கியமான ஒரு மருத்துவத் தாவரமாகும், வணிக ரீதியாக இது அஸ்வகந்தா மற்றும் இந்திய ஜின்ஸெங் என்று அழைக்கப்படுகிறது. இதன் தாவரவியல் பெயர் விதானியா சோம்னிஃபெரா (எல்.) டுனல் (தாவரக்குடும்பம்: சோலனேசி) ஆகும். கிமு 3000 வருடம் முதல் ஆயுர்வேதத்தில் இது ஒரு நரம்பு பலவிருத்தியாக பயன்படுத்தப்படுகிறது. சரக் சம்ஹிதையில், அஸ்வகந்தா செடிக்கு 'குதிரையின் வாசனை' என்றும் (எனவே அஸ்வகந்தா என்று பெயர்; அஸ்வம் என்றால் குதிரை, கந்தா என்றால் கிழங்கு அல்லது வாசனை என்று பொருள்) மேலும், இதற்க்கு 'நுகர்வோரின் வீரியத்தை அதிகரிக்கும் திறன்' உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அஸ்வகந்தாவின் அறிவாற்றல்–ஊக்குவிக்கும் திறன் நினைவாற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். இந்தத் தாவரத்தின் வேர் தூள், நடுக்குவாதம் (பார்கின்சன்) மற்றும் அல்சைமர் நோய் போன்ற நரம்பு தொடர்பான நோய்களின் சிகிச்சைக்கு பயனுள்ளதாக இருக்கும். இது ஒரு மன அழுத்த நீக்கியாக, மன அழுத்தத்தின் போது உடல் மற்றும் மன சமநிலையைப் பராமரிக்க உதவுகிறது. இது ஒவ்வாமை எதிர்ப்பு, முடக்குவாத எதிர்ப்பு மற்றும் நரம்புக் கோளாறு எதிர்ப்பு சக்திகளையும் கொண்டுள்ளது. மேலும் ஆஸ்துமா, சளி மற்றும் இருமல், நீரிழிவு நோய், கை–கால் வலிப்பு, இரத்தக்கொழுப்பு அதிகரிப்பு (ஹைப்பர்லிபிடேமியா), தொழுநோய், பெண் பாலியல் செயல் பிறழ்ச்சி, ஆண் மலட்டுத்தன்மை, கீல்வாதம் மற்றும் பல நோய்களின் சிகிச்சைகளுக்கு உதவியாகவும் உள்ளது.

காய்ச்சல் மற்றும் வலி வீக்கங்களுக்கு இதன் இலைகள் பயன்படுத்தப்படுகின்றன. பூக்கள் துவர்ப்பு சுவையுடையவை, சிறுநீர்ப்பெருக்கி மற்றும் பாலுணர்வை ஏற்படுத்தும். இதன் விதைகள் குடற்புழுக்கொல்லி ஆகும்.



அஸ்வகந்தா சாம்பல் நிறமுள்ள, ஒரு வருடம் முதல் பல்லாண்டு வாழக்கூடிய, சிறிய அல்லது நடுத்தர புதர் செடியாகும். இது 30–150 செ.மீ உயரம் வரை நிமிர்ந்து வளரக்கூடிய, குதிரையின் சிறுநீர் போன்ற கடுமையான துர்நாற்றம் வீசக்கூடிய தாவரமாகும். தாவரம் முழுவதும் மிகச்சிறிய, நன்றாகக் கிளைத்த வெள்ளி சாம்பல் முடிகளால் சூழப்பட்டிருக்கும். இலைகள் மாறி மாறி அமைந்திருக்கும் (மாற்றிலை அமைவு), எளிமையானவை, சற்று அலைந்த விளிம்புகளுடன் இருக்கும். மலர்கள் பொதுவாக சிறியவை, பச்சை, இலைக்கோணங்களுடன், தனித்த அல்லது சைமோஸ் மஞ்சரியாக (பூங்கொத்து) இருக்கும். முதிர்ந்த பழங்கள் ஆரஞ்சு–சிவப்பு நிறமுடைய பெர்ரி வகைக் கனியாகும். விதைகள் பொதுவாக மஞ்சள் நிறத்தில் பல, டிஸ்காய்டு, ரெனிஃபார்ம் வடிவில் இருக்கும். வேர்கள் நீளமாக, கட்டைத்தன்மையுடன், கிழங்குகளாகவும் இருக்கும். இந்திய ஆயுர்வேத மருந்துத் தொழில்களில் ஆண்டுதோறும் 1,500 டன் மருந்துகள் உற்பத்திக்காக சுமார் 7,000 டன் அஸ்வகந்தா உலர்ந்த வேர்கள் தேவைப்படுகின்றன.

## வேளாண்-தொழில்நுட்பங்கள்

அஸ்வகந்தா ஒரு வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய பயிர். 600 மில்லி மீட்டர் முதல் 750 மில்லி மீட்டர் வரை வருடாந்திர மழைப்பொழிவுடன் 14° செல்சியஸ் முதல் 42° செல்சியஸ் வரை வெப்பநிலை கொண்ட வறண்ட பகுதிகளில் இது நன்றாக வளரும். இதற்கு நல்ல வடிகால் வசதி கொண்ட கரிசல் மற்றும் செம்மண் பொருத்தமானது. மண் தளர்வானதாகவும், ஆழமாகவும், சற்று காரமாகவும் (அமில காரத்தன்மை 7.5–8.0) இருக்க வேண்டும். அஸ்வகந்தா குறுகிய கால (4 முதல் 4.5 மாதங்கள்) மழை காலத்திற்கு பிறகான (காரிஃப்) பயிர் ஆகும்.

அஸ்வகந்தாவை பயிரிடுவதற்கு முன்பு, நிலத்தை ஒரு முறை இறக்கைக் கலப்பை உழவும் (மோல்டு போர்டு ப்ளஃப்), இரண்டு முறை பரம்படித்தல் உழவும் செய்யவும். ஒரு ஹெக்டேருக்கு சுமார் 10–20 டன் பண்ணை எருவை கடைசி உழவின் போது மண்ணில் இட வேண்டும். பின்னர் பலகைகளால் வயல் சமன் செய்யப்படுகிறது.


தூவி விதைத்தல் மற்றும் நாற்றங்கால் பாத்திகளில் இருந்து நாற்றுகளை நடுதல் ஆகியவை அஸ்வகந்தா சாகுபடியின் இரண்டு முறைகள். அஸ்வகந்தா விதைகளுக்கு விதை உறக்கநிலை இல்லை. ஒரு கிலோவில் அஸ்வகந்தா விதைகளில் 3.5 லட்சம் முதல் 4.25 லட்சம் வரை விதைகள் இருக்கும், பொதுவாக 80% சதவிகிதம் விதைகள் முளைக்கும் தன்மையுடையவை. மானாவாரி பகுதிகளில் ஒரு ஹெக்டேருக்கு 15 கிலோ அதிக விதை விகிதத்துடன் தூவி விதைத்தல் முறை அஸ்வகந்தா சாகுபடிக்கு மிகவும் பொதுவான முறையாகும். விதைப்பதற்கு உகந்த காலம் ஆகஸ்ட் 2வது முதல் 3வது வாரம் ஆகும். மழைப்பொழிவு அதிகமாக இருந்தால், விதைப்பு செப்டம்பர் வரை தாமதமாகும். தூவி விதைப்பு தவிர, வரி விதைப்பு மற்றும் உயர்த்தப்பட்ட படுக்கை விதைப்பு ஆகியவை பிரபலமடைந்து வருகின்றன.

நாற்றுகளை நடவு செய்வது அஸ்வகந்தாவிற்கு பின்பற்றப்படும் மற்றொரு சாகுபடி முறையாகும். நாற்றுகளை வளர்ப்பதற்கு, நன்கு தயார் செய்யப்பட்ட, உயர்த்தப்பட்ட நாற்றங்கால் படுக்கைகளில் விதைகள் விதைக்கப்படுகின்றன. ஜூன்–ஜூலை மாதங்களில், விதைகளை 5 செ.மீ இடைவெளியில் மண்ணில் சுமார் 1–3 செ.மீ ஆழத்தில் விதைத்து, லேசான மண்ணால் மூட வேண்டும். விதைகளை விதைத்த பிறகு லேசான நீர்ப்பாசனம் நல்ல முளைப்பைத் தரும். முளைப்பு வருதல் விதைத்த 6–7 நாட்களுக்குள் தொடங்கி பத்து நாட்களுக்குள் முடிவடையும். ஜூலை–ஆகஸ்ட் மாதங்களில் நாற்றுகளை 6 வாரங்களுக்குப் பிறகு, போதுமான உயரம் இருக்கும் போது, நன்கு தயார் செய்யப்பட்ட நிலத்தில் 15 க்கு 15 செ.மீ இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். ஒரு ஹெக்டேரில் நடவு செய்வதற்குப் போதுமான நாற்றுகளை உற்பத்தி செய்ய சுமார் 5 கிலோ விதைகள் தேவைப்படும்.

## பயிர் மேலாண்மை

தூவுதல் அல்லது வரிசை முறை மூலம் விதைகள் விதைக்கப்பட்ட வயல்களில், விதைத்த 25 முதல் 30 நாட்களுக்குள், செடிகள் நன்கு வளர்வதற்காக நெருக்கமாக வளர்ந்துள்ள நாற்றுகளை கைகளால் அகற்றி, ஒரு ஹெக்டேருக்கு சுமார் 3 முதல் 6 லட்சம் நாற்றுகள் இருக்குமாறு பராமரிக்க வேண்டும். களைச் செடிகள் வளர்வதைத் தடுக்க ஆரம்ப நிலையில் ஒரு முறை கையால் களையெடுப்பது போதுமானது. கரிம தழைக்கூளம் (முந்தைய பயிர்களின் எச்சங்களைப் பயன்படுத்தி) களை வளர்ச்சியைத் தடுக்கவும், மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கவும் செய்யலாம். அஸ்வகந்தா பயிருக்கு அதிக மழை அல்லது நீர்ப்பாசனம் கேடு விளைவிக்கும். எனவே, தேவைப்பட்டால் ஒன்று அல்லது இரண்டு முறை உயிர்காக்கும் நீர்ப்பாசனம் கொடுக்கலாம்.

சில இடங்களில், அஸ்வகந்தா பயிர்கள் அசுவினி மற்றும் ஹடா வண்டுகள் போன்ற பூச்சிகளாலும், நாற்று அழுகல் மற்றும் ஆல்டர்னேரியா இலை கருகல் போன்ற நோய்களாலும் பாதிக்கப்படலாம். எனவே, வேம்பு (*அசாடிராக்டா இண்டிகா*), கொடிவேலி (*பிளம்பகோ இண்டிகா*), ஊமத்தை (*டாட்டுரா மெட்டல்*) மற்றும் மாட்டுக் கோமியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உயிர்–பூச்சிக்கொல்லிகள் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம், மேலும் நோய்களைக் கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கை மண்ணில் இடலாம்.



## அறுவடை

அஸ்வகந்தா செடிகள் டிசம்பர் மாதத்திலிருந்து பூத்து காய்க்கத் தொடங்கும். மேலும் பயிர் பெருக்கம் செய்ய விதைகளைப் பிரித்தெடுக்க முதிர்ந்த பழங்களைச் சேகரிக்கலாம்.


நடவு செய்த 4 முதல் 4.5 மாதங்களில், இலைகள் காய்ந்து, பெர்ரி ஆரஞ்சு நிறமாக மாறும் போது, அஸ்வகந்தாவின் வேர்கள் ஜனவரி–பிப்ரவரி மாதங்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும். அஸ்வகந்தாவை வறண்ட காலநிலையில் அறுவடை செய்ய வேண்டும். வேர்களை சேதப்படுத்தாமல் முழு செடியையும் பிடுங்கி அறுவடை செய்தல் வேண்டும். அறுவடையின் போது மண்ணில் போதுமான ஈரப்பதம் இருத்தல் அவசியமாகும், இதனால் செடிகளை எளிதாக பிடுங்க முடியும். அறுவடை செய்யப்பட்ட பயிரிலிருந்து, வேர்களைத் தண்டுடன் அடிப்பகுதிக்கு மேலே 1 – 2 செ.மீ., வரை விட்டு வெட்டி எடுத்து, வெயிலில் 10 நாட்கள் உலர்த்தி, பின்னர் வெள்ளை பாலித்தீன் பைகளில் அடைக்க வேண்டும்.



120 நாட்களான அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்– ஹல்கோட்டி, கடக், கர்நாடகா

## சாகுபடியின் பொருளாதாரம்

ஒரு ஹெக்டேர் நிலத்தில் இருந்து சராசரியாக 625–750 கிலோ வரை அஸ்வகந்தா வேர்களை (உலர்ந்த எடை) பெறலாம். சாகுபடி செலவு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 20,000 முதல் 25,000 வரை ஏற்படும், சராசரி வருவாய் ஹெக்டேருக்கு ரூ. 92,500 முதல் ரூ. 1, 12,500 வரை கிடைக்கும், சராசரியாக 4.5 பி:சி விகிதம் ஆகும் (செலவு ஆதாய விகிதம்). அஸ்வகந்தா சாகுபடியானது 5 முதல் 6 மாதங்களில் ஒரு ஹெக்டேருக்கு சுமார் 100 ஆட்கள் நாள் வேலையை உருவாக்குகிறது.




### வட்டார வழிவகை மையம் – தெற்கு வட்டாரம்

வட்டார வழிவகை மையம் – தெற்கு வட்டாரம் என்பது தேசிய மூலிகைத் தாவரங்கள் வாரியத்தின் (என். எம். பி. பி.) ஏழு வட்டார வழிவகை மையங்களில் ஒன்றாகும். தேசிய மூலிகைத் தாவரங்கள் வாரியமானது இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

**Contact**

NMPB Regional-cum-Facilitation Centre
(Southern Region)
KSCSTE-Kerala Forest Research Institute
Peechi 680653, Thrissur District, Kerala, INDIA
Phone: +91 487 2690100; +91 8289995600
E-mail: rcfcsouthern@gmail.com
Website: www.rcfcsouthern.org